தமிழீழத் திரைக்களம்

# TAMILEELA THIRAIKALAM

**No.14, 16TH Street, Anna Nagar Vilar Road, Thanjavur - 613 006, Tamil Nadu**
**Mob: +91-81227 11832, Email : tamileelathiraikalam@gmail.com**

Ref. : 007/Jul/07/2021 Date : 13.07.2021

அன்பார்ந்த உலகத்தமிழ் உறவுகளே!

தமிழ்த்தேசியத் தலைவர் அவர்களை வரலாறு ஈன்றெடுத்த வரலாற்றை "மேதகு" என்ற பெயரில் திரைக்காவியமாக நாம் வெளியிட்டமையை உளமார ஏற்று அதனை பேசுபொருளாக்கி, தமிழ்த்தேசிய அரசியல் செல்நெறியில் ஒரு வீச்சை ஏற்படுத்தும் தளமாக அதனைப் பேரெழுச்சியுடன் கொண்டாடிவருவதை "தமிழீழத் திரைக்களம்" ஆகிய நாம் பேருவகையடைவதோடு, எம்மீது நீங்கள் கொண்டிருக்கும் பெருநம்பிக்கைக்கு எந்நாளும் உண்மையாக இருப்போம் என உறுதியும் கூறுகின்றோம்.

தமிழ்த்தேசிய அரசியலிற்கு உரம் சேர்க்கும் திரைச்செயற்பாடுகளை தொடர்ந்து நாம் முன்னெடுக்க வேண்டுமென்ற வாஞ்சையோடு, எமக்கு பண மற்றும் பொருளுதவிகளை அளிப்பதற்கு "மேதகு" திரைக்காவியத்தில் பங்கெடுத்த எங்களது செயற்பாட்டாளர்களை தனிப்பட்ட முறையில் அணுகி நிதிகொடுக்க முன்வரும் அழைப்புகள் தொடர்ந்து வந்தவண்ணம் உள்ளது. உங்களின் இந்த பேரன்பிற்கும் ஆதரவுக்கும் மிகுந்த நன்றிகள். ஆனால், அமைப்பியல் நேர்த்தி கருதி, தனிப்பட நீங்கள் எமக்களிக்கும் அன்பளிப்புகளை நாம் ஏற்றுக்கொள்ள இயலாது என்பதை உறவுணர்வுடன் அறியத்தருகின்றோம்.

எமது தமிழீழத் திரைக்களத்தின் செயற்பாடுகளை வலுப்படுத்தி தமிழ்த்தேசிய அரசியலினை மக்கள்திரளிடம் எடுத்துச்செல்வதோடு எதிரியின் பொய்க் கருத்தேற்றங்களிற்குப் பதிலடிகொடுக்கும் வகையில் வீரியத்துடன் எமது திரைச்செயற்பாடுகள் அமைய வேண்டுமென்ற எண்ணத்தில் எமக்கு உதவி நல்க விரும்புவோர் தகவலுக்காகவும், அமைப்பியல் நடைமுறைகளுக்கமைய இயங்கவும் "தமிழீழத் திரைக்களம்" அமைப்பினை நீங்கள் நேரடியாக தொடர்புகொள்ள வசதியாக, இங்கே எங்களின் தொடர்புகள் இணைக்கப்பட்டுள்ளன.

மின்னஞ்சல்: tamileelathiraikalam@gmail.com

அலைபேசி: +91 8122711832

இணையம்: https://tamileelathiraikalam.com/

மேலும், இந்த முறையில் நேரடியாக பங்களிப்பு செய்வதன் வாயிலாக, உங்களது உதவிகள் அனைத்தும் பொதுவெளியில் உரிய முறையில் வெளிப்படுத்த எங்களுக்கு ஏதுவாக இருக்கும் என்பதையும் இதன் மூலம் உறுதிசெய்கின்றோம்.

நன்றி

Chief Administrator,

தமிழீழத் திரைக்களம்

Tamileela Thiraikalam